# மேட்டுப்பாளையம் நகராட்சி

09.09.2021ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

**1**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20028/2021/தி2 நாள்.08.09.2021 இல் தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–2022 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் நகராட்சி நிர்வாக துறை மான்ய கோரிக்கையின் போது கீழ் குறிப்பிட்டுள்ள அறிவிப்புகள் வெளியிட்டுள்ளார்.அதில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளில் பொதுமக்களின் நலனுக்காகவும் குறிப்பாக சிறுவர்களுக்காகவும் 3096 விளையாட்டுத் திடல்கள் மற்றும் பூங்காக்கள் உள்ளன. நடப்பாண்டில் 552 பூங்காக்கள் ரூ.122 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். திட்ட விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது. அதன்படி, கீழ்கண்ட பூங்காவை மேம்பாடு செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் முழு அரசு மானியம் பெற திட்ட கருத்துரு அனுப்பும் நடவடிக்கைக்கு நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பூங்காவின் பெயர் | இடத்தின் பரப்பு அளவு | எண்ணிக்கை | மதிப்பீடு தொகை |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.32 வசந்தம் நகர் பகுதியில் புதிதாக பசுமை பூங்கா அமைத்தல் | 2416.00 சதுர மீட்டர் | ஒன்று | ரூ.50.00 இலட்சம் |

**அலுவலகக் குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண் 1347/2021/இ1

**2**

இந்நகராட்சிக்குட்பட்ட சிறுமுகை ரோட்டில் நகராட்சிக்குச் சொந்தமாக பொது உபயோக இடத்தில் சிலர் ஆக்கிரமிப்பு செய்து பழைய இரும்புக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறார்கள். மேற்படி ஆக்கிரமிப்பாளர்கள் மீது ஆக்கிரமிப்பை அகற்ற நீதிமன்றத்தில் நகராட்சி சார்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கிற்கு மாவட்ட முதன்மை நீதிமன்றம், சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம் மற்றும் மாவட்ட நீதிமன்றம், கோவையிலும் கேவிட் பைல் செய்ய ஆகும் செலவினம் ரூ.9500/–ஐ வழங்குமாறு நகராட்சி வழக்கறிஞர் கோரியுள்ளார். எனவே, மேற்படி வழக்கிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி
   தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி செலவினம் மேற்கொண்டதற்கு
   மன்றம் அனுமதிக்கலாம்.
   ந.க.எண்.2025/2021/அ1

**3**

இந்நகராட்சிக்குட்பட்ட 12 பள்ளிகளில் உள்ள கழிவறைகளை தூய்மைபணிகள் மேற்கொள்ளும் பணிக்கு திருவாளர் எஸ்.எஸ்.இன்ஜினியர்ஸ், கோவை என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, பொதுசுகாதாரம் மற்றும் பள்ளி ஆசிரியர்களின் நலனை கருத்தில் கொண்டு தற்போது பணி மேற்கொண்டு வரும் நிறுவனத்திற்கே அவர்கள் ஏற்கனவே வழங்கியுள்ள ஒப்பந்தத் தொகையின் அடிப்படையில் தொகை வழங்கவும் மேலும் (01.09.2021 முதல் 30.09.2021) ஒரு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.4943/2017/எச்1

| | |
|---|---|
| 4 | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது நடைபெறும் பாதாள சாக்கடைத்திட்டம் மற்றும் சிறப்பு சாலை அமைக்கும் பணிகள் நடைபெறுவதால் அவ்வப்போது ஏற்படும் பம்பிங் மெயின் மற்றும் பகிர்மானக் குழாய்கள் உடைப்பு சரிசெய்யவும், பொதுக்குழாய் உடைப்பு சரிசெய்யவும், பொது கழிப்பிடங்களுக்குத் தேவையான உதிரிச்சாமன்கள் வாங்கி விநியோகம் செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு பம்பிங் மெயின், பகிர்மானக் குழாய்கள் உடைப்பு சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினத்திற்கு குடிநீர் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.2440/2021/இ1 |
| 5 | மேட்டுப்பாளையம் நகராட்சிப்பகுதியில் கோவிட் 19 தடுப்பு குறித்து நகராட்சி மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் விவரத்தினை 17.08.2021 ஆம் தேதியில் மாலை தமிழகம் பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பர கட்டணம் ரூ.14700/—ஐ வழங்கக் கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே, மேற்படி தொகையினை மாலை தமிழகம் பத்திரிக்கை நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1974/2021/இ1 |
| 6 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32 மணிநகர் பகுதியில் உள்ள நகரவைத் துவக்கப்பள்ளியில் சுமார் 230 மாணவர்கள் பயின்று வருகின்றனர். எனவே, மாணவர்களுக்கு வகுப்பறைகள் போதுமானதாக இல்லை. எனவே, முதல் தளத்தில் வகுப்பறை கட்டிடம் அமைத்து அக்கட்டிடத்திற்கு கூடுதல் வசதிகள் அமைக்க (கைப்பிடி சுவர், Weathering Course) ஆகும் தோராய மதிப்பீடு ரூ.9.50/— இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் கல்விநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

# மேட்டுப்பாளையம் நகராட்சி

23.09.2021ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

<table>
<tr><td>1</td><td>நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.14000/2021/இ1, நாள்.09.09.2021ல் கோரியுள்ளபடி மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிதாக ஏற்படுத்தியுள்ள மனைப்பிரிவுகள் மற்றும் விடுபட்ட இடங்களில் புதிதாக தெருவிளக்குகள் (LED விளக்கு) பொருத்துதல் பணிக்காக ரூ.28.35 இலட்சத்திற்கு பிரேரணை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>பணியின் விபரம் :–<br>
<table>
<tr><td>வ.எண்.</td><td>பணியின் பெயர்</td><td>மதிப்பீடு<br>(ரூ இலட்சத்தில்)</td></tr>
<tr><td>1</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதிதாக ஏற்படுத்தியுள்ள மனைப்பிரிவுகள் மற்றும் விடுபட்ட இடங்களில் புதிதாக தெருவிளக்குகள் (LED விளக்கு) பொருத்துதல் பணி</td><td>28.35</td></tr>
</table>
<br>அலுவலகக் குறிப்பு :<br>அ). மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ). அரசு மானியம் வழங்கும் தொகையில் பணி மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண்.959/2021/இ1)</td></tr>
<tr><td>2</td><td>மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் அரசாணை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள்.30.04.1997ன் படியும் நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2902/பி3/2016, நாள்.24.02.2016 மற்றும் 18.07.2016ன்படியும் முறையே 61 மற்றும் 90 பணியாளர்களுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரி துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட செயல்முறைகளில் 01.07.2019 வரை நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேலும் 3 ஆண்டுகளுக்கு நிர்வாக அனுமதி வேண்டி இவ்வலுவலக ந.க.எண்.எச்1/6219/2016, நாள்.21.01.2019ன்படி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டதில் சில கூடுதல் விபரங்களுடன் மீண்டும் இவ்வலுவலக ந.க.எண்.எச்1/494/2019, நாள்.10.02.2021ல் மீண்டும் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களிடமிருந்து அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் மேற்கொள்ள காலதாமதம் ஆகும் என்பதாலும் சுகாதாரப் பணிகள், பாதிக்காமல் இருக்கவும், பொது சுகதார அவசர அவசியத்தை கருதி நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் அனுமதியினை எதிர்நோக்கி இந்நகராட்சியில் தற்போது தனியார் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவுப்பணி மேற்கொள்ளப்பட்டு வரும் திருவாளர் எஸ்.எஸ்.இஞ்சினியர்ஸ் என்ற நிறுவனத்திற்கு 31.08.2021 வரை பணிகள் மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்......... நாள்.01.09.2021 முதல் 30.09.2021 முடிய அனுமதி பெறப்பட்டுள்ளது. இவர்கள் மேலும் 01.10.2021 முதல் 31.10.2021 வரை ஒரு மாதத்திற்கு தொடர்ந்து பணிபுரிய அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு :<br>அனுமதி வழங்கலாம். ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
</table>

3 மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு சொந்தமான சிராஜ்நகர் பகுதியில் உள்ள நகராட்சி குப்பைக்கிடங்கில் Biomining முறைப்படி குப்பைகளை அகற்றி சுத்தம் செய்யப்பட்டது. இதில் சுமார் 6 ஏக்கர் நிலம் குப்பையில் இருந்து மீட்கப்பட்டது. இதில் தற்போது மரங்கள் நட உத்தேசிக்கப்பட்டது. இதற்கு இவ்விடத்தில் குப்பைகளை வேறு இடத்திற்கு அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. இவ்விடத்தினை வனக்கல்லூரி Deen அவர்கள் ஆய்வு செய்யப்பட்டு மரங்கள் நட ஏதுவாக நிலத்தினை செவ்வக வடிவமாக இருக்கும்படி அறிவுறுத்தி உள்ளனர். இப்பணியினை மேற்கொள்ள ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகளை மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1312/2021/இ1

4 மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள வார்டு எண்.4ல் உள்ள திப்பு சுல்தான் பகுதியில் நகராட்சியில் Reserve site உள்ளது. இதில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தற்பொழுது அந்த இடத்தினை நகராட்சி கையகப்படுத்தி உள்ளது. இவ்விடத்தினை பாதுகாக்க கம்பிவேலி அமைக்க வேண்டியுள்ளது. இப்பணியினை மேற்கொள்ள ரூ.3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இப்பணியினை இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1312/2021/இ1

5 தலைமை நீரேற்று நிலையத்தில் பணியாற்றும் பணியாளர்களின் ஆகஸ்ட் 2020 முதல் ஜீன் 2021 வரை உண்டான பதினொறு மாதங்களுக்கான மிகை நேரப்படி ரூ.3,24,220/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | பணியாளர்களின் பெயர் | பதவி | ஆகஸ்ட் 2020 | | செப்டம்பர் 2020 | | அக்டோபர் 2020 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நேரம் | தொகை ரூ | நேரம் | தொகை ரூ | நேரம் | தொகை ரூ |
| 1 | எஸ்.மகேஸ்குமார் | மின்பணியாளர் நிலை 1 | 52 | 12.315 | 48 | 11.747 | 56 | 13.262 |
| 2 | என்.கிருஷ்ணமூர்த்தி | கிளீனர் | 64 | 10.568 | 56 | 9.555 | 56 | 9.537 |
| 3 | கே.ரங்கராஜ் | கிளீனர் | 48 | 7.337 | 40 | 6.318 | 48 | 7.337 |
| 4 | எஸ்.புருஷோத்தமன் | உதவியாளர் | 44 | 5.397 | – | – | 40 | 4.906 |
| **மொத்தம்** | | | | **35.617** | | **27.620** | | **35.042** |

| வ. எண். | பணியாளர்களின் பெயர் | பதவி | நவம்பர் 2020 | | டிசம்பர் 2020 | | ஜனவரி 2021 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நேரம் | தொகை ரூ | நேரம் | தொகை ரூ | நேரம் | தொகை ரூ |
| 1 | எஸ்.மகேஸ்குமார் | மின்பணியாளர் நிலை 1 | 44 | 10768 | 48 | 11368 | 48 | 11368 |
| 2 | என்.கிருஷ்ணமூர்த்தி | கிளீனர் | 44 | 7743 | 36 | 6131 | 48 | 8175 |
| 3 | கே.ரங்கராஜ் | கிளீனர் | 40 | 6318 | 48 | 7337 | 56 | 8560 |
| 4 | எஸ்.புருஷோத்தமன் | உதவியாளர் | 56 | 7098 | 40 | 4906 | 40 | 4906 |
| **மொத்தம்** | | | | **31927** | | **29742** | | **33009** |

| வ. எண். | பணியாளர்களின் பெயர் | பதவி | பிப்ரவரி 2021 | | மார்ச் 2021 | | ஏப்ரல் 2021 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நேரம் | தொகை ரூ | நேரம் | தொகை ரூ | நேரம் | தொகை ரூ |
| 1 | எஸ்.மகேஸ்குமார் | மின்பணியாளர் நிலை 1 | 32 | 8390 | 40 | 9473 | 40 | 9789 |
| 2 | என்.கிருஷ்ணமூர்த்தி | கிளீனர் | 24 | 4525 | 32 | 5450 | 48 | 8447 |
| 3 | கே.ரங்கராஜ் | கிளீனர் | 32 | 5415 | 40 | 6114 | 40 | 6318 |
| 4 | எஸ்.புருஷோத்தமன் | உதவியாளர் | 32 | 4346 | 40 | 4906 | 40 | 5226 |
| **மொத்தம்** | | | | **22676** | | **25943** | | **29780** |

| வ. எண். | பணியாளர்களின் பெயர் | பதவி | மே 2021 | | ஜீன் 2021 | |
|---|---|---|---|---|---|---|
| | | | நேரம் | தொகை ரூ | நேரம் | தொகை ரூ |
| 1 | எஸ்.மகேஸ்குமார் | மின்பணியாளர் நிலை 1 | 48 | 11368 | 40 | 9789 |
| 2 | என்.கிருஷ்ணமூர்த்தி | கிளீனர் | 32 | 5450 | 32 | 5632 |
| 3 | கே.ரங்கராஜ் | கிளீனர் | 40 | 6114 | 40 | 6318 |
| 4 | எஸ்.புருஷோத்தமன் | உதவியாளர் | 40 | 5057 | 24 | 3136 |
| **மொத்தம்** | | | | **27989** | | **24875** |

மொத்தம் ரூ.3,24,220/–(ரூபாய் மூன்று இலட்சத்து இருபத்து நான்காயிரத்து இருநூற்றி இருபது மட்டும்) மிகை நேரப்படியினை ஆணையரே வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் 30.03.1989ம் தேதிய ந.க.எண்.24372/89/ஓபி1 எண் கடிதத்தில் அதிகார அளிப்பு வழங்கப்பட்டுள்ளதால் ஆகஸ்ட் 2020 முதல் ஜீன் 2021 வரை உண்டான பதினொறு மாதங்களுக்கான மிகைநேரப்படி ரூ.3,24,220/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.5220/2021/இ1

**6.** மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 20ல் உள்ள பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் சுமார் 1000 குழந்தைகள் பயின்று வருகிறார்கள். தற்பொழுது உள்ள கழிப்பிடங்கள் போதுமானதாக இல்லாத காரணத்தால் மேலும் இரண்டு புதிய கழிப்பிடங்கள் கட்ட வேண்டியுள்ளது. இதற்கு ரூ.2.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகளை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்

**7.** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கழிவுநீர் கால்வாய்களில் தெளிக்கப்படும் கொசு ஒழிப்பு மருந்து Bacilus Thuringiensis (BT) இருப்பு குறைவாக உள்ளதால், எதிர்வரும் பருவமழையை கருத்தில் கொண்டு போதிய இருப்பு வைக்க வேண்டியுள்ளதால் Bacilus Thuringiensis (BT) 350 கிலோ வாங்க ரூ.4,33,000/– செலவினம் மேற்கொள்ளவும், Tamilnadu Medical Service Coporation நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் M/s.அருணை எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்
ந.க.எண்.4134/2020/எச்1

**8.** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையை கருத்தில் கொண்டு கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ள Fogging Machine ல் பயன்படுத்தப்படும் Pyrethrum 2% Extract 400 லிட்டர் வாங்க ரூ.5,20,000/– செலவினம் மேற்கொள்ளவும் , Tamilnadu Medical Service Coporation நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் M/s அருணை எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்
ந.க.எண்.1587/2020/எச்11

# மேட்டுப்பாளையம் நகராட்சி

30.09.2021ம் தேதி காலை 11.00 மணிக்கு நடைபெறவுள்ள
மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

## கூட்டப் பொருள்

| | |
|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சி தொடர்பான வழக்குகளை<br>1. மாண்பமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் மேட்டுப்பாளையம்<br>2. மாண்பமை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மேட்டுப்பாளையம்.<br>3. மாண்பமை சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம் ஆகிய மேட்டுப்பாளையம் நீதிமன்றங்கள் மற்றும் கோவை நீதிமன்றங்களில் நகராட்சி சார்பாக ஆஜராகி வழக்காடுவதற்கு வழக்கறிஞர் திரு.வி.பாலசுப்பிரமணி அவர்களை நியமனத் தேதி முதல் மூன்று ஆண்டுகளுக்கு நகராட்சி வழக்கறிஞராக தற்காலிகமாக நியமனம் செய்யவும், நகராட்சி விதிகளுக்குட்பட்டும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதிக்குட்பட்டும் வழக்கறிஞர் கட்டணம் வழங்கப்படும். நகராட்சி விதிகளுக்குட்பட்டு (Munnicipal Manual Para No 55.6) நகராட்சி ஆணையருக்கு ஒப்பந்தம் எழுதித்தர வேண்டும் என்ற நிபந்தனையுடன் நியமனம் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.457/2002/சி3 |
| 2 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் குடிநீர் விநியோகம் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து Old Scheme, Combined Scheme, மற்றும் New Scheme என மூன்று திட்டங்கள் மூலமாக செய்யப்படுகின்றது. மேலும் நகராட்சி பகுதிகளுக்கு கே.கே.நகர், மணிநகர், பழைய நகராட்சி அலுவலகம், சங்கர் நகர், எஸ்.எம்.நகர், LIC நகர் மற்றும் பூஸ்டர் மேல்நிலை தொட்டிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது.<br><br>தற்பொழுது நகராட்சி குடிநீர் பிரிவில் உள்ள குழாய் பணியாளர், மின் பணியாளர்கள் மற்றும் Fountain cleaner ஆகிய பணியிடங்கள் காலியாக உள்ளது. நகராட்சியில் மூன்று திட்டங்கள் மூலம் 6 மேல்நிலை தொட்டிகள் மூலம் விநியோகம் செய்ய நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் சீரான முறையில் மேற்கொள்ள கூடுதலாக 21 பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள். இவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கோவை அவர்களின் செயல்முறை ஆணைப்படி ந.க..எண்.7457/2020/E3, நாள்.25.09.2020ல் நிர்ணயம் செய்யப்பட்ட கூலியுடன் ESI, EPF மற்றும் Insurance உடன் வழங்க உத்தேசமாக ரூ.9.90 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணிக்கு நகர்மன்ற தீர்மானம் எண் 294, நாள்.31.12.2020 மூலம் அனுமதி பெறப்பட்டு 01.11.2021 முதல் 89 நாட்களுக்கு குடிநீர் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 268/2021/இ1 |